"உடன்பிறப்பே வா" –

# 3-ஆம் கட்ட தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## எஸ்,ஜெகத்ரட்சகன் எம்,பி, தொடங்கி வைக்கிறார்! புதுவை தி,மு,க, அமைப்பாளர் இரா,சிவா அழைப்பு!



புதுச்சேரி, நவ.9-

புதுச்சேரி மாநில அமைப்பாளரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சிவா விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: -

தி.மு.க. தலைவர், தமிழ்நாடு அரசின் முதல்வர் தளபதி அவர்கள் ஒன்றிய பாரதிய ஜனதா அரசின் பாசிச ஆதிக்கத்திலிருந்தும், இதற்கு துணை நிற்கும் புதுச்சேரி பா.ஜ.க கூட்டணி அரசிடமிருந்தும் மாநிலத்தை மீட்டு, புதுச்சேரியின் மண்-மொழி-மானம் காக்க, தி.மு.கழகத்தின் சார்பில் "உடன்பிறப்பே வா" பரப்புரையை முன்னெடுக்க ஆணையிட்டுள்ளார்.

புதுச்சேரி, மாநிலத்தில் உள்ள 30 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து, பாசிச பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் அவலங்களை எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் குறைந்தபட்சம் 30 சதவீத வாக்குகளைக் திமுக உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்ற இலக்கும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

அதன்படி, தலைமைக் கழக ஒருங்கிணைப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., கடந்த மாதம் 6-ஆம் தேதி முதல் கட்டமாக 5 தொகுதிகளிலும், இரண்டாம் கட்டமாக 15-ஆம் தேதி 8 தொகுதிகளில் திமுக உறுப்பினர் சேர்க்கும் பணியை வீடு, வீடாகச் சென்று தொடங்கி வைத்தார்.

இந்நிலையில் மூன்றாம் கட்ட திமுக உறுப்பினர் சேர்க்கை முகாம் இன்று (9-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை) காலை 09.00 மணி அளவில் அரியாங்குப்பம் தொகுதி பழைய அரியாங்குப்பம் ரோடு வீராம்பட்டினம் ரோடு சந்திப்பில் இருந்து தொடங்குகிறது.

தொடர்ந்து மணவெளி தொகுதி பூரணாங்குப்பம் கிராமத்திலும், ஏம்பலம் தொகுதி கரிக்கலாம்பாக்கத்திலும், பாகூர் தொகுதிக்கு உட்பட்ட மதிக்கிருஷ்ணாபுரம், பாகூர், குருவிநத்தம் கிராமங்களிலும், நெட்டப்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட நெட்டப்பாக்கம் கிராமத்திலும் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெறுகிறது.

எனது தலைமையில் நடைபெறும் உறுப்பினர் சேர்க்கை முகாமை, ஒருங்கிணைப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., வீடு, வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைக்கிறார்.

முகாமிற்கு அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில், திமுக மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் என அனைவரும் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

திருவண்ணாமலையில்

# சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## வடக்கு மாவட்டச் செயலாளர் எம்,எஸ்,தரணிவேந்தன் தலைமையில் நடைபெறுகிறது!

திருவண்ணாமலை, நவ. 9-

திருவண்ணாமலை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகார போக்கில், தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கொண்டுவந்துள்ளதைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. கண்டன ஆர்ப்பாட்டம் வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், எம்.பி. தலைமையில் நடைபெறவுள்ளது.

11.11.2025 செவ்வாய்க் கிழமைக் காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை அண்ணா சிலை அருகில், திருவண்ணாமலை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகார போக்கில், தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கொண்டுவந்துள்ளதைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வடக்கு மாவட்ட செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமை வகிக்கிறார்.

திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர் .

தெற்கு மாவட்ட மதச்சார்பற்ற கூட்டணியின் நிர்வாகிகள் காங்கிரஸ் மாவட்ட தலைவர் செங்கம் ஜி.குமார், திராவிடர் கழக மாவட்டத் தலைவர் சி.மூர்த்தி, மதிமுக மாவட்ட செயலாளர் சீனி. கார்த்திகேயன், சி.பி.எம். மாவட்ட செயலாளர் பா. செல்வம், சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் இரா.திருமலை. முஸ்லீம் லீக் மாவட்டத் தலைவர் ஐ.எம்.சுலைமான்,

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள் சி.நியூட்டன், பா. வளர்மதி, மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் ஏ.ஆர்.ாநசர்உசேன், மக்கள் நீதி மய்ய மண்டல செயலாளர், இரா.அருள், தமிழக வாழ்வுரிமைக்கட்சி மாவட்ட செயலாளர்கள் கா.கண்ணதாசன், மல்லி. வினோத், ப.ராஜசேகர்,

வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் நிர்வாகிகள், காங்கிரஸ் மாவட்ட தலைவர் எஸ்.பிரசாந்த், திராவிடர் கழக மாவட்ட தலைவர் அ.இளங்கோவன், மதிமுக மாவட்ட செயலாளர்கள் ஏ.கே.ரத்தினகுமார், வி.கே.சுதாகரன், முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் டி.எம்.பீர் முகமத், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள், அ.அசுரவடிவேல், ஆரணி முத்து, வெம்பாக்கம் மதியழகன்,

மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் எச். ஜமால், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்ட செயலாளர் ச.சுரேஷ், க.பாரதிதாசன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி யில் அங்கம் வகிக்கும் இயக்கங்களின் மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், பகுதி, கிளை, வட்டக் கழக நிர்வாகிகள், அணிசார்ந்த நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள உள்ளார்கள்.

ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை திருவண்ணாமலை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

## வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அமைச்சர் தா.மோ. அன்பரசன் பரிசு வழங்குகிறார்!

# செயின்ட் தாமஸ் மவுண்ட் மான்ஃபோர்ட் பள்ளியில் மாபெரும் கராத்தே, யோகா, சிலம்பம் உலக சாதனை நிகழ்ச்சி!

## 30 மாவட்டங்களில் இருந்து 3,500 மாணவர்கள் பங்கேற்பு!

சென்னை, நவ.9-

இந்தியாவில் முதல் முறையாக ஆஸ்கார் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் ( அபிசியல் அட்டெம்ப்ட்) தமிழ்நாடு ஆர்ட் கல்ச்சர் கவுன்சில் TNACC சார்பில் நடத்தும் Friend's கராத்தே, யோகா சிலம்பம் உலக சாதனை நிகழ்ச்சி இன்று (9.11.2025) காலை ஆலந்தூர் சட்டமன்ற தொகுதி உட்பட்ட செயிண்ட் தாமஸ் மவுண்டில் அமைந்துள்ள மான்ஃபோர்ட் மெட்ரிகுலேஷன் தனியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறுகிறது.

மேலும் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 30 மாவட்டங்களில் இருந்து 3500 மாணவர்கள் பதிவு செய்து வருகை தர உள்ளார்கள்.

இதில் சிறப்பு அழைப்பாளராக ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு தொழில் நிறுவனங்களில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் விழாவில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்குகிறார்.

இந்த உலக சாதனை நிகழ்ச்சியை WSSA நிறுவனத் தலைவர் சிலம்பம் டாக்டர் எஸ்.சுதாகரன், நேஷனல் செகரட்டரி ஜென்ரல் ஆஃப் இந்தியன் யோகாசன ஸ்போர்ட்ஸ் பெட்றேஷன் (YSF) டாக்டர் லட்சுமணன் நாராயணன் மற்றும் தமிழ்நாடு ஆர்ட் கல்ச்சர் கவுன்சில் (TNACC) ஒருங்கிணைப்பு செயலாளர் கராத்தே மாஸ்டர் எம்.முருகன் ஆகியோர்களின் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

TNACC (ஆப்பிலேட்டட் டு இந்தியன் ஆர்ட் கல்ச்சர் பெடரேஷன் மற்றும் ரெகா க்னிஸ்ட் பை மினிஸ்ட்ரி ஆஃப் கல்ச்சர், கவர்மெண்ட் ஆப் இந்தியா) இந்த விழாவில் முக்கிய பிரமுகர்கள் மற்றும் கழக நிர்வாகிகளும் பெருந்திரளாக கலந்து கொள்வார்கள்.



கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் தி.மு.க. சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி, பாகப்பரப்புரை கூட்டம் குருவாட்டுசேரி ஊராட்சியில் பாகம் 110–ல் நடைபெற்றது. இதில் ஒன்றிய கழக செயலாளர் கும்மிடிப்பூண்டி கி.வே.ஆனந்த் குமார் , தலைமை பொதுக்குழு உறுப்பினர் பா.செ.குணசேகரன் ஆகியோர் வாக்காளர்களின் உரிமைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து பல்வேறு ஆலோசனை கூறி புத்தகத்தை வழங்கினார்கள். உடன் வி.ஆர்.கணேசன், மங்களம் சுரேஷ், ஜோதி, ஆண்டவன், முருகன், சரவணன், வேலாயுதம், மணிகண்டன், மனோஜ், லோகேஷ் உள்பட பலர் உள்ளனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த உதவி மையம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் ஈடுபடும் கழகத்தினருக்கு எழும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு உதவிடும் வகையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் தலைமைக் கழகம் மூலம் ஒருங்கிணைத்திட கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் **என். ஆர். இளங்கோ எம்.பி.**, மேற்பார்வையில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கழக நிர்வாகிகள் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான சந்தேகங்களை 08065420020 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கான பதில்களை பெற்று முறையாக பணிகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| மண்டலம் | மாவட்டம் | பெயர் | தொடர்பு எண் |
|---|---|---|---|
| தெற்கு | கன்னியாகுமரி கிழக்கு<br>கன்னியாகுமரி மேற்கு<br>திருநெல்வேலி கிழக்கு<br>திருநெல்வேலி மத்திய<br>திருநெல்வேலி மேற்கு<br>தூத்துக்குடி தெற்கு<br>தூத்துக்குடி வடக்கு<br>தென்காசி தெற்கு<br>தென்காசி வடக்கு | வழக்கறிஞர்<br>கே.எஸ்,ரவிச்சந்திரன் | 9840022250 |
| வடக்கு | இராணிப்பேட்டை<br>கள்ளக்குறிச்சி தெற்கு<br>கள்ளக்குறிச்சி வடக்கு<br>சேலம் கிழக்கு<br>சேலம் மத்திய<br>சேலம் மேற்கு<br>தர்மபுரி கிழக்கு<br>தர்மபுரி மேற்கு<br>திருப்பத்தூர்<br>திருவண்ணாமலை தெற்கு<br>திருவண்ணாமலை வடக்கு<br>வேலூர் வடக்கு<br>வேலூர் தெற்கு | வழக்கறிஞர்<br>ஜெ.பச்சையப்பன் | 9840260178 |
| மதுரை | சிவகங்கை<br>மதுரை தெற்கு<br>மதுரைமாநகர்<br>மதுரை வடக்கு<br>தேனி வடக்கு<br>தேனி தெற்கு<br>இராமநாதபுரம்<br>விருதுநகர் தெற்கு<br>விருதுநகர் வடக்கு | வழக்கறிஞர்<br>பாலாஜி | 9710582658 |
| சென்னை | காஞ்சிபுரம் வடக்கு<br>சென்னை கிழக்கு<br>சென்னை தெற்கு<br>சென்னைதென் மேற்கு<br>சென்னை மேற்கு<br>சென்னைவட கிழக்கு<br>சென்னை வடக்கு<br>திருவள்ளூர் கிழக்கு<br>திருவள்ளூர் மத்திய<br>திருவள்ளூர் மேற்கு | வழக்கறிஞர்<br>நந்தகோபால் | 9884153737 |
| டெல்டா | அரியலூர்<br>கடலூர் மேற்கு<br>தஞ்சாவூர் தெற்கு<br>தஞ்சாவூர் மத்திய<br>தஞ்சாவூர் வடக்கு<br>திருச்சிராப்பள்ளி தெற்கு<br>திருச்சிராப்பள்ளி மத்திய<br>திருச்சிராப்பள்ளி வடக்கு<br>புதுக்கோட்டை வடக்கு<br>புதுக்கோட்டை தெற்கு<br>திருவாரூர்<br>நாகை<br>பெரம்பலூர்<br>மயிலாடுதுறை | வழக்கறிஞர் பெ.ரகு | 9444413889 |
| விழுப்புரம் | கடலூர் கிழக்கு<br>காஞ்சிபுரம் தெற்கு<br>விழுப்புரம் தெற்கு<br>விழுப்புரம் மத்திய<br>விழுப்புரம் வடக்கு | வழக்கறிஞர்<br>சந்திரபோஸ் | 9841364135 |
| கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி கிழக்கு<br>கிருஷ்ணகிரி மேற்கு<br>திண்டுக்கல் கிழக்கு<br>திண்டுக்கல் மேற்கு<br>திருப்பூர் கிழக்கு<br>திருப்பூர் தெற்கு | வழக்கறிஞர்<br>என்.மருது கணேஷ் | 9840034950 |
| மேற்கு | ஈரோடு தெற்கு<br>ஈரோடு மத்திய<br>ஈரோடு வடக்கு<br>கரூர்<br>கோயம்புத்தூர் தெற்கு<br>கோயம்புத்தூர்மாநகர்<br>கோயம்புத்தூர் வடக்கு<br>திருப்பூர் மத்திய<br>திருப்பூர் வடக்கு<br>நீலகிரி<br>நாமக்கல் கிழக்கு<br>நாமக்கல் மேற்கு | வழக்கறிஞர் சசிதரன் | 9952084065 |

ஒருங்கிணைப்பு பணிக்கு உதவிட :
அழகிரி சதாசிவம், (9841950707)
(மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்)
வே. கௌதமன், (9940923535)
(மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்)

"அண்ணா அறிவாலயம்"
சென்னை -18
நாள்- 07.11.2025

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**